வெளியீடு எண்:497

உ

சிவமயம்

# திருந்துதேவன்குடித் தலவரலாறு

## (A brief history of Thirunthudevankudi Temple)



திருவாவடுதுறை ஆதீனம்

2003

விலை ரூ.5.00

T15282
R005E07
T.15282

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருந்துதேவன்குடி
# அருள்தரு அருமருந்தம்மை
# உடனாய
# அருள்மிகு கற்கடேஸ்வரர்
# திருக்கோயில்

# திருக்குட நன்னீராட்டு
# விழாமலர்

திருவள்ளுவர் ஆண்டு 2034

மெய்கண்டார் ஆண்டு 780

சுபானு ஆண்டு

ஆனி மாதம் 22-ஆம் நாள்

6.7.2003 - ஞாயிற்றுக்கிழமை

ட.

உரிமை பதிவு
வெளியீடு எண்: 497
முதற்பதிப்பு . 2003

**விலை ரூபா.5.00**

ஆக்கியோன்

*திருவாவடுதுறை ஆதீனப் புலவர்*

*தா.ம. வெள்ளைவாரணம்.*

ஸ்ரீநமசிவாயமூர்த்தி ஆஃப்செட் அச்சகம்,
திருவாவடுதுறை.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருந்துதேவன்குடித் தலவரலாறு

## (A brief history of Thirunthudevankudi Temple)

இது

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து

இருபத்து மூன்றாவது குரு மகாசந்நிதானம்

**சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்**

அவர்கள் அருளாணையின் வண்ணம்

வெளியிடப்பெறுவது.

**திருவாவடுதுறை ஆதீனம்**

**2003**

# தேவாரம்

மருந்து வேண்டில் இவை மந்திரங்கள் இவை
புரிந்து கேட்கப்படும் புண்ணியங்கள் இவை
திருந்து தேவன்குடித் தேவர்தேவு எய்திய
அருந்தவத்தோர் தொழும் அடிகள் வேடங்களே.

சேடர் தேவன்குடித் தேவர்தேவன் தனை
மாடம் ஓங்கும் பொழில் மல்கு தண் காழியான்
நாட வல்ல தமிழ் ஞானசம்பந்தன்
பாடல் பத்தும் வல்லார்க்கு இல்லையாம் பாவமே.


ஸ்ரீ அபூர்வநாயகி
SREE ABURVA NAYAKI
அருள்மிகு கற்கடேஸ்வரர்
ARULMIGU KARKADESWARAR
ஸ்ரீ அருமருந்தநாயகி
SREE ARUMARUNTHA NAYAKI

சிவமயம்

# திருந்துதேவன்குடி ஆலய வரைபடத்தின் விளக்கம்

1. கருவறை.
2. அர்த்த மண்டபம்.
3. நந்தி மேடை.
4. மகா மண்டபம்.
5. நடராசர் மண்டபம்.
6. விநாயகர் சன்னதி.
7. சுப்பிரமணியர் சன்னதி.
8. கஜலட்சுமி சன்னதி.
9. சண்டேசர் கோயில்.
10. நடராசர் சன்னதி.
11. நால்வர் சன்னதி.
12. உள் கோபுர வாயில்.
13. திருக்கல்யாண மண்டபம்.
14. அபூர்வ நாயகி சன்னதி.
15. அருமருந்தம்மை சன்னதி.
16. வெளிக்கோபுர வாயில்.

# திருந்துதேவன்குடி ஆலய வரைபடம்



# BIBLIOGRAPHICAL DATA



| | | | |
|---|---|---|---|
| 1. | Title of the Book | - | **Short History of Thirunthudevankudi.** |
| 2. | Author | - | T.M. Vellaivaranam. |
| 3. | Publisher | - | Thiruvavaduthurai Adheenam Saraswathi Mahal Library & Research Centre, Thiruvavaduthurai 609803. |
| 4. | Publication No. | - | 497 |
| 5. | Price | - | Rs.5.00 |
| 6. | Subject | - | History of Saiva Temple. |
| 7. | Language | - | Tamil. |
| 8. | No. of Pages | - | 40 + 12 |
| 9. | Edition | - | First Edition. |
| 10. | No. of Copies | - | 2000 |
| 11. | Date of Publication | - | 6.7.2003 - Temple Kumbabishek Day. |
| 12. | Paper used | - | Seshayee 13.7 |
| 13. | Size of the Book | - | 1/8 Crown. |
| 14. | Printing type | - | Offset Printing. |
| 15. | Binding | - | Section stitching. |
| 16. | Printer | - | Sri Namasivayamurthy Offset Press, Thiruvavaduthurai. |

உ

சிவமயம்

# முன்னுரை

திருந்துதேவன்குடி என்னும் திருத்தலம் திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் பெற்ற தலம். சோழ நாட்டுக் காவிரியின் வடகரைத் தலங்களுள் ஒன்று. நண்டு, தேவேந்திரன், தந்வந்திரி முதலியவர் களால் வழிபடப்பெற்ற தலம். சோழ மகாராஜனால் மிகப் பழங்காலத்தில் திருப்பணி செய்யப்பட்ட தலம்.

இத்தகு சிறப்பு வாய்ந்த இத்தலத்தின் திருக் கோயில் திருவாவடுதுறை ஆதீனம் குரு மகா சன்னிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களாலும், தருமபுர ஆதீனம் குரு மகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்க ளாலும், கோயம்புத்தூர் சிவாலய திருப்பணி சக்கர வர்த்தி திரு. இராச. வசந்தகுமார் அவர்களாலும், கொண்டாங்குடி திரு. ஆர். சுவாமிநாதபிள்ளை அவர்களாலும் மற்றும் பல திருப்பணிச் சீலர்களாலும் திருப்பணி செய்விக்கப் பெற்றுத் திருக்குடமுழுக்கு விழா 6.7.2003 அன்று நடைபெறுகிறது.

திருக்குடமுழுக்கு விழாவை ஒட்டித் திருந்து தேவன்குடித் தலவரலாறு, எளிய மக்களும் புரிந்து

*கொண்டு பயனடையும்படி திருவாவடுதுறை ஆதீன கர்த்தர் சீர்வளர்சீர் குரு மகா சன்னிதானம் அவர்கள் திருவுளம் கொண்டருளிய வண்ணம் திருவாவடுதுறை ஆதீன வெளியீடாக வெளிவருகிறது.*

*இந்நூலில் திருந்துதேவன்குடித் தலச் சிறப்பும், தலவரலாறும், இத்தலத்தின் தேவாரப் பதிகமும், அண்மையில் உள்ள திருவிசலூர் தலவரலாற்றுச் சுருக்கமும், பதினான்கு சாத்திரங்களுள் ஒன்றான திருவுந்தியார் என்ற சாத்திர நூலை அருளிய திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் வரலாறும் அடங்கி உள்ளன.*

*இந்நூலை உருவாக்கும் பணியில் அடியேனை ஈடுபடுத்தி ஆட்கொண்டருளிய சீர்வளர்சீர் குரு மகா சன்னிதானம் அவர்களின் திவ்விய பொற்பாத கமலங்களை மனமொழி மெய்யால் வணங்கும் வணக்கத்தையும் அடியேனது நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*அடியேன்*

*பொறையாறு*
*12.6.2003*

**தா.ம. வெள்ளைவாரணம்.**
*திருவாவடுதுறை ஆதீனப் புலவர்.*

# Brief History of Shiva Temple at Thirunthudevankudi

Though all Shiva temples are of divinely places, those temples which are having hymns of Thevaram are considered to be more divinely.

Thirunthudevankudi, which is having hymns of Thirugnanasambandar, is situated on the northern bank of river Cauveri. It can be reached by bus either from Kumbakonam 7 Km, or from Mayiladuthurai 28 Km. Further to reach the temple one has to get down at Thiruviyalur, and then walk down about 2 Km. towards north.

The temple is surrounded with gutter on three sides and is located in the middle of paddy fields, at present, away from main hamlet.

The temple has one Rajagopuram, two Corridors (Praharams), Nirtha Mandapam, Maha Mandapam, Natarajar Mandapam, Sanctum (Karuvarai) and usual other deities.

The main deity, Lord Karkateswar, accompanied with Sri Arumarundammai and Sri Aburvanayaki blesses one and all.

This deity was worshipped by a Crab and got Mukthi. Hence the name Karkateswar has been contrived. (Karkat means Crab) There is a hole at the head of linga which was used as a passway by the Crab to perform daily pooja. Devotees pour milk in the hole while performing pooja.

Indra (Head of Devas) performed pooja here with thousand lotus flowers daily for 48 days and had been blessed with more powers to rule Amarlok (Heaven)

Danvantri (Medicine man of Devas) worshipped this deity and got rare medicinal leaves from here.

Chola king got cured of his paralysis ailment by the grace of Karkateswar. He renovated the temple.

Thirugnanasambandar adored this Lord by singing sacred songs (Hymns).

Let us also visit Thirunthudevankudi and worship Lord Karkateswar to get relief of all kinds of pains in our life and finally get salvation.

உ

சிவமயம்

# திருந்துதேவன்குடித் தலவரலாறு

## பாடல் பெற்ற தலம்

உலகில் உள்ள எல்லா நிலப்பகுதிகளும் ஒரே மாதிரியாக அமையாமல் சில இடங்கள் மலையாகவும் சில இடங்கள் காடாகவும் சில இடங்கள் தாவரம் செழித்த நிலமாகவும் வேறு வேறு வகையாக அமைந்திருக்கும். இவை போலவே ஆன்மீக வளர்ச்சிக்கு ஏற்ப இறை வழிபாடு செய்பவர்க்கும் தான தருமம் செய்பவர்க்கும் பெரும் புண்ணியப் பயன் தரும் இடங்களாகவும் இருக்கும். இப்படிப் புண்ணியப் பயன் தரும் இடங் களைத் திருத்தலம் என்பர். இத்தகைய திருத்தலங் களுள், சிவத்தலங்கள் பல உள்ளன. அவற்றில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரோலோ அல்லது அவர்களில் ஒருவர், இருவராலோ தேவாரத் திருப்பதிகம் பெற்ற தலங்கள் பாடல் பெற்ற தலங்கள் எனப்படும்.

இங்ஙனம் பாடல் பெற்ற தலங்களில் ஒன்று **திருந்துதேவன்குடி** என்னும் தலம். இத்தலம் சோழ நாட்டுத் தலங்களில் காவிரியின் வடகரைத் தலங் களுள் 42ஆவது தலமாகத் திகழ்கிறது. இது திருஞான சம்பந்தர் அருளிய தேவாரப் பதிகம் ஒன்று மட்டும் பெற்ற தலம்.

## தலத்தின் பெயர்க் காரணம்

திருந்துதேவன்குடி என்ற தொடரில் திருந்து என்ற சொல், திருத்தமான – செம்மையான – முழுமையான என்று பொருள்படும். திருந்துதேவன் என்பது முழுமை யாக கடவுள் என்று பொருள்படும். அதாவது இந்திரன் முதலானவர்கள் மற்றொரு தெய்வத்தை வழிபட்டு வரம் பெறவேண்டிய தேவர்கள் ஆவார்கள். ஆனால் சிவ பெருமான் மற்றொரு தெய்வத்தை வழிபட வேண்டாமல், தன்னை வழிபடுகிற தேவர்கள் எல்லார்க்கும் வரம் தரத்தக்க முழுமுதற் கடவுளாக இருக்கிறார். இதனால் சிவபெருமான் திருந்துதேவன் எனவும் தேவதேவன் எனவும் பெயர் பெறுவார். இந்தத் திருந்துதேவன் எழுந் தருளிய தலம் திருந்துதேவன்குடி எனப் பெயர் பெற்றது.

இந்தத் தலத்துக்கு நண்டாங் கோயில் என்ற பெயர் தற்கால வழக்கில் இருந்து வருகிறது. இத்தலத்துப் பெருமானை நண்டு பூசித்துத் தனது சாபம் நீங்கியது என்று தல வரலாறு கூறுகிறது. இவ் வரலாற்றின்படி இத் தலத்து இறைவன் நண்டை ஆட்கொண்டதால் இறைவ னுக்கு நண்டாண்டான் என்ற பெயரும், இறைவன் எழுந் தருளிய கோயிலுக்கு நண்டாண்டான் கோயில் என்ற பெயரும் ஏற்பட்டன. நண்டாண்டான் கோயில் என்ற பெயர் வழக்கில் நண்டாங்கோயில் என்று மருவி வழங்குகிறது.

## தலம் இருக்கும் இடம்

நண்டாங்கோயில் என்று தற்போது பேச்சில் வழங்குகிற திருந்துதேவன்குடி என்னும் பாடல் பெற்ற

தலம் தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் வட்டம் திருவிசலூர்க்கு வடக்கே உள்ளது. கும்பகோணத்தி லிருந்து காவிரியின் வடகரை வழியாக மயிலாடுதுறைக் குச் செல்லும் பேருந்து வழியில் கும்பகோணத்துக்குக் கிழக்கே 7 கிலோ மீட்டர் தொலைவிலும், மயிலாடு துறைக்கு மேற்கே 29 கிலோமீட்டர் தொலைவிலும் உள்ள திருவிசலூரை அடைந்து அங்கிருந்து வடக்கே 2 கி.மீ. தூரம் சென்றால் திருந்துதேவன்குடியை அடைய லாம். கும்பகோணத்திலிருந்து மயிலாடுதுறைக்குக் காவிரிக்கு வடகரை வழியாகப் பேருந்துகள் செல் கின்றன. மற்றும் கும்பகோணத்திலிருந்து 2, 26, 38 ஆம் நம்பர் நகரப் பேருந்துகள் செல்கின்றன. திரு விசலூர் பள்ளிக்கூடம் என்ற பஸ் ஸ்டாப்பில் இறங்கி, வடக்கே செல்லும் தார்ச்சாலையில் இரண்டு பர்லாங் தூரம் நடந்தால் திருவிசலூர் சிவன் கோயிலை அடைய லாம். அக்கோயிலின் வடக்கே செல்லும் தார்ச் சாலையில் சென்றால் திருந்துதேவன்குடிக் கோயிலை அடையலாம். திருவிசலூர் பள்ளிக்கூடம் பஸ் ஸ்டாப்பி லிருந்து வடக்கே செல்லும் சாலையில் காரும், வேனும், தனிப் பேருந்துகளும் செல்லும்படி நல்ல சாலை அமைக்கப்பட்டிருக்கிறது.

## திருக்கோயிலின் அமைப்பு

திருந்துதேவன்குடியில் உள்ள திருக்கோயில் வயல்களுக்கு நடுவே அகழியால் சூழப்பெற்று இரண்டு பிரகாரங்களையும், இரண்டு கோபுர வாயில்களையும் உடையதாய்க் கிழக்குப் பார்த்த ஆலயமாக அமைந்

துள்ளது. கோயிலின் தெற்கு மேற்கு வடக்கு ஆகிய மூன்று பக்கங்களிலும் தொடர்ந்து அகழி இருக்கிறது. கிழக்கே இருந்த அகழி தூர்ந்து போய்க் கோயிலுக்குச் செல்லும் வழியாக மாறிவிட்டது. கோயிலைச் சுற்றி மக்களின் குடியிருப்பு எதுவும் இல்லை. நான்கு பக்கங் களிலும் நஞ்சை நிலங்களே காட்சி அளிக்கின்றன. திருவிசலூரிலிருந்து இக்கோயிலுக்கு வரும் தார்ச்சாலை புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

முதற்கோபுர வாயிலின் மேலே கோபுரம் இல்லை. கோபுர வாயில் மட்டும் உள்ளது. முதற் கோபுர வாயிலை உள்ளடக்கி நாற்புரமும் வெளிச் சுற்று மதில் உள்ளது. இரண்டாம் கோபுர வாயிலுக்கு மேலே கோபுரம் உள்ளது. இந்த இரண்டாம் கோபுர வாயிலுக்கு உள்ளே கருவறை, அர்த்த மண்டபம், நந்தி மண்டபம், மகா மண்டபம், நடராஜர் மண்டபம் பரிவார ஆலயங்கள் என்பவை உள்ளன. இரண்டாம் கோபுர வாயிலை உள்ளடக்கி நாற்புறமும் உள்சுற்று மதில் உள்ளது.

**கருவறை**

இது சதுர வடிவில் கிழக்கு முகமாக அமைந் துள்ளது. கருவறையில் உள்ள மூலவர் சுயம்பு மூர்த்தி யான சிவலிங்கமாகும். இலிங்கத்தின் பாணம் மட்டும் பொன்னிறமாய்ப் பளபளப்பாகத் திகழ்கிறது. பாணத் தின் உச்சியில் நண்டு புகுந்து வந்த துளை இருக்கிறது. கருவறைக்கு மேலே ஏகதள விமானம் உள்ளது. இது எட்டுப்பட்டை வடிவில் அமைந்துள்ளது. கருவறைச் சுவர்களும் விமானமும் விமானத்தின் மேலுள்ள தூபியும்

கருங்கல்லால் அமைந்தவையாகும். கருவறையின் வெளிப்புறச் சுவரில் தெற்குப் பக்கத்தில் இரண்டு தேவ கோட்டங்கள் உள்ளன. கிழக்குக் கோட்டத்தில் விநாயகரும் மேற்குக் கோட்டத்தில் தக்ஷிணாமூர்த்தியும் எழுந்தருளி உள்ளனர். வடக்குப் புறச் சுவரில் இரண்டு தேவ கோட்டங்கள் உள்ளன. மேற்குக் கோட்டத்தில் பிரம்மாவும் கிழக்குக் கோட்டத்தில் துர்க்கையும் எழுந்தருளி உள்ளனர்.

**அர்த்த மண்டபம்**

இது கருவறையை ஒட்டினாற்போல் கருவறைக்குக் கிழக்கே உள்ளது. சதுர வடிவில் அமைந்திருக்கிறது. இதன் தெற்குச் சுவரும் வடக்குச் சுவரும் மேள் தளமும் கருங்கல்லால் ஆனவை.

**நந்தி மண்டபம்**

இது அர்த்த மண்டபத்துக்குக் கிழக்கே உள்ளது. இங்கே இடப தேவர் படுத்திருக்கும் கோலத்தில் மூலவரைப் பார்த்த வண்ணமாகக் காட்சி தருகிறார்.

**மகா மண்டபம்**

இது நந்தி மண்டபத்துக்குக் கிழக்கே உள்ளது. சதுர வடிவில் விசாலமாக இருக்கிறது. மண்டபத்தின் நடுவில் நான்கு கருங்கல் தூண்கள் உள்ளன. இதன் தெற்குச் சுவர் வடக்குச் சுவர் மேல்தளம் ஆகியவை கருங்கல்லால் அமைந்துள்ளன. தெற்குச் சுவரில்

இரண்டு அரைத் தூண்களும், வடக்குச் சுவரில் இரண்டு அரைத் தூண்களும் உள்ளன. மொத்தத்தில் இம் மண்டபத்தில் எட்டுத்தூண்கள் உள்ளன.

## பரிவார ஆலயங்கள்

இரண்டாம் கோபுர வாயிலுக்கு உள்ளே, மதிற் சுவரை ஒட்டினாற்போல் பிரகாரம் உள்ளது. இந்தப் பிரகாரத்தின் மேற்குப் பகுதியில் மதிற்சுவரை ஒட்டி நிருதி மூலையில் விநாயகர் சன்னதி தனிக் கோயிலாக இருக்கிறது. இக்கோயிலில் விநாயகர் எழுந்தருளி உள்ளார். விநாயகர் சன்னதிக்கு வடக்கில் மதிலை ஒட்டினாற்போல் சுப்பிரமணியர் சன்னதி உள்ளது. இங்கே சுப்பிரமணியர் வள்ளி தெய்வானையோடு எழுந்தருளி உள்ளார். வடமேற்கில் கஜலட்சுமி சன்னதி உள்ளது. வடக்குப் பிரகாரத்தில் அர்த்த மண்டபத்தை ஒட்டி சண்டேசர் சன்னதி தனிக்கோயிலாக உள்ளது. மற்றும் வடக்கு மதில் கிழக்கு மதில் சேரும் இடத்தில் பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் நடராசர் சன்னதி இருக்கிறது.

## நடராசர் மண்டபம்

இரண்டாம் கோபுர வாயிலுக்கு உள்ளாகவும் மகா மண்டபத்துக்குக் கிழக்காகவும் நடராசர் சன்னதியிலிருந்து தெற்கு மதில் வரையில் நீண்டு நடராசர் மண்டபம் உள்ளது. முழுவதும் கருங்கல்லால் ஆனது. திருப்பணி செய்யப்பெற்று புதுப்பொலிவுடன் விளங்குகிறது.

## நால்வர் சன்னதி

நடராஜர் சன்னதிக்கு எதிரே தெற்கு மதிலை ஒட்டி நால்வர் சன்னதி இருக்கிறது.

## திருக்கல்யாண மண்டபம்

முதற்கோபுர வாயிலுக்கும் இரண்டாம் கோபுர வாயிலுக்கும் இடையே கிழக்கு மேற்காக நீண்ட சதுர வடிவில் திருக்கல்யாண மண்டபம் உள்ளது. இது கிழக்கு மேற்கில் மூன்று அங்கணங்களாக அமைந்துள்ளது.

## அம்மன் சன்னதிகள்

திருக்கல்யாண மண்டபத்திற்கு வடக்குப் புறத்தில் இரண்டு அம்மன் சன்னதிகள் தனித்தனிக் கோயில்களாக உள்ளன. இவற்றுள் மேற்கில் உள்ள சன்னதி அபூர்வநாயகியின் கோயிலாக உள்ளது. இங்குள்ள அம்மன் திருமேனி பூர்வத்தில் (முன்பு) இருந்த அம்மன் திருமேனி ஆகும். கிழக்கில் உள்ள அம்மன் சன்னதி அருமருந்தம்மையின் கோயிலாகும். சோழமன்னன் திருப்பணி செய்தபோது புதிதாகச் செய்யப்பட்ட திருமேனி இங்கே பிரதிட்டை செய்யப் பட்டதாகும். இந்த இரண்டு அம்மன் சன்னதிகளும் தெற்குப் பார்த்தவையாகும்.

## இறைவன் இறைவி திருநாமங்கள்

திருந்துதேவன்குடித் தலத்து இறைவனுக்குத் தேவதேவேசனார், கற்கடேஸ்வரர்,மூலிகைவனேசுவரர்,

மருந்தீசர் என்ற திருநாமங்கள் வழங்குகின்றன. இந்திரன், பிரமன், விஷ்ணு முதலான எல்லாத் தேவர்க்கும் பெரிய தேவராக (முழுமுதற் கடவுளாக) இருப்பதால் **தேவ தேவேசனார்** என்ற பெயர் உண்டாயிற்று. ஞானசம்பந்தர் இத்தலத்துத் தேவாரப் பதிகத்தில் ''திருந்துதேவன்குடித் தேவர் தே'' என்றும் ''தேவன்குடித் தேவதேவன்'' என்றும் இப்பெயரைக் குறிப்பிட்டுள்ளார். நண்டின் பூசைக்கு மகிழ்ந்து அதன் சாபத்தை நீக்கி விமோசனம் தந்ததால் **கற்கடேசுவரர்** என்ற பெயர் வழங்கி வருகிறது. (கற்கடம் – நண்டு). இத்தலம் பூர்வத்தில் மூலிகை வனமாக இருந்தபோதே அவ்வனத்தின் நடுவில் இறைவன் சுயம்பு வடிவாகத் தோன்றியதால் ***மூலிகை வனேசுவரர்*** என்ற பெயர் ஏற்பட்டது. சோழ மகாராச னுக்குப் பக்கவாத நோயை நீக்க இத்தலத்து இறைவன் மருத்துவராகச் சென்றதால் **மருந்தீசர்** என்ற பெயர் உண்டாயிற்று.

சோழ மகாராசன் இத்தலத்தில் திருப்பணி செய்தபோது அம்மன் சிலை கிடைக்காமையால் புதிதாக ஒரு அம்மன் சிலை செய்தான். தனது பக்கவாத நோயை நீக்க இறைவன் மருத்துவராகவும் இறைவி மருத்துவச்சி யாகவும் வந்ததால் புதிதாகச் செய்த சிலைக்கு அருமருந் தம்மை என்று பெயர் சூட்டினான். பின்பு பழைய அம்மன் சிலை கிடைத்ததால் அதற்குப் பூர்வத்தில் இருந்த அம்மை என்ற பொருளில் அபூர்வ நாயகி என்று பெயர் சூட்டினான்.

T.15282



# தலபுராணச் செய்திகள்

## 1) நண்டும் இந்திரனும் வழிபட்டது

முன்னொரு காலத்தில் துருவாச முனிவர் சிவ பூசை செய்து கொண்டிருந்தார். அந்த இடத்துக்கு ஒரு இயக்கன் வந்தான். அவன் துருவாசரைப் பார்த்துக் கைகொட்டி நகைத்துப் பரிகாசம் பண்ணினான். அதனால் துருவாச முனிவர் கோபம் அடைந்தார். இயக்கனை நோக்கி ''இயக்கனே! நீ சிவபூசையை இகழ்ந்து கை கொட்டி நகைத்தாய். நண்டு தனது கொடுக்கை அடிக்கடி, கைகொட்டுவது போல் சேர்த்துச் சேர்த்துப் பிரிக்கும். அதனால் நீ நண்டாகக் கடவாய்'' என்று சாபம் இட்டார். இயக்கன் பயம் கொண்டு துருவாசரின் காலில் வீழ்ந்து வணங்கிச் சாப விமோசனம் கேட்டான்.

துருவாசர் அவனைப் பார்த்து, ''நீ சிவபூசையை இகழ்ந்ததால், நீயும் சிவபூசை செய்தால்தான் இப்பாவம் தீரும். ஆகவே பூலோகத்தில் உள்ள திருந்துதேவன்குடி அகழியில் நண்டாகப் பிறக்கவேண்டும். அகழியில் பூக்கும் தாமரைப் பூவைப் பறித்து அத்தலத்து தேவ தேவேசனை வழிபாடு செய். இப்படி ஒரு மண்டலம் செய்தால் உனக்கு விமோசனம் உண்டாகும்'' என்றார். சாபத்தின்படி இயக்கன் திருந்துதேவன்குடி அகழியில் நண்டாகப் பிறந்தான்.

அகழியில் பிறந்த நண்டு அகழியிலேயே பல நாட்கள் வாழ்ந்தது. ஒருநாள் இறைவன் அருளால்

சிவனை வழிபடவேண்டும் என்ற எண்ணம் நண்டுக்கு உண்டாயிற்று. அகழிக் கரையில் நெடுக வளை தோண்டிக் கொண்டே சென்ற நண்டு சிவலிங்கத்தின் அடிப்பாகத்தை அடைந்தது. அங்கிருந்த துளை வழியாக மேலே ஏறியது. கடைசியில் சிவலிங்கத்தின் உச்சியை அடைந்தது.

இப்படி வழி தெரிந்துகொண்ட நண்டு, வந்த வழியாகத் திரும்பி அகழியை அடைந்தது. அகழியில் பூத்த தாமரைத் தண்டை தனது கொடுக்கால் நறுக்கி, தண்டோடு தாமரைப் பூவை கொடுக்கால் கவ்வியபடி வளையில் இழுத்துப்போய்ச் சிவலிங் கத்தின் முடியில் இட்டுப் பாணத்தை வலம் வந்தது. இங்ஙனம் நண்டு நாடோறும் சிவனை வழிபட்டு வந்தது.

இதற்கு இடையில், தேவலோகத்து அரசனான இந்திரன் அடிக்கடி அசுரர்களோடு போரிட்டு வந்ததால் பலம் குறைந்து போனான். அதனால் இந்திரன் பலத்தை மீண்டும் பெறுவதற்காகத் தனது குருவான வியாழப் புத்தேளை அடைந்து வணங்கி வழி கேட்டான். வியாழ பகவான் இந்திரனைப் பார்த்து, "நீ பூலோகத்துக்குப் போய்க் காவிரிக் கரையின் வடக்கே உள்ள திருந்து தேவன் குடியில் எழுந்தருளியிருக்கிற தேவதேவே சனை நாள்தோறும் ஆயிரம் தாமரைப் பூவால் சகஸ்ர நாம அர்ச்சனை செய். இப்படி ஒரு மண்டலம் செய்தால் அங்குள்ள சிவன் உனக்கு இழந்த பலத்தை மீண்டும் தருவார் என்று கூறினார்.

அதுகேட்ட இந்திரன் பூலோகத்துக்கு வந்து திருந்து தேவன்குடியை அடைந்து தேவதேவேசனை வழிபட்டான். அகழியில் நீராடினான். அகழியில் இருந்த தாமரைகளைப் பறித்தான். அகழியில் தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது பூக்களே கிடைத்தன. ஒரு பூ குறைந்ததால் அர்ச்சனை செய்ய முடியவில்லை.

இந்திரன் மறுநாள் காலை அகழியை அடைந்து அகழியை உற்றுப் பார்த்தபடி நின்றான். ஒரு தாமரைப் பூ மட்டும் ஆடியது. பிறகு அது நீரில் முழுகிவிட்டது. இப்படி ஒரு தாமரைப்பூ காணாமல் போனதைக் கண்டு வியப்படைந்தான். இதன் காரணத்தை அறிய இறைவனிடம் கேட்டறிவோம் என்று சிவலிங்கத்தின் முன்னே போய் நடந்ததைக் கூறி முறையிட்டான்.

சிறிது நேரத்தில் இலிங்கத்தின் உச்சியில் உள்ள தொலை வழியாக ஒரு நண்டு வருவதைக் கண்டான். அந்த நண்டு தனது கொடுக்கால் ஒரு தாமரைப் பூவை இழுத்து வருவதையும் கண்டான். நண்டு அந்தத் தாமரைப் பூவைப் பாணத்தின் உச்சியில் இட்டு விட்டுக் கீழே ஆவுடையாரில் இறங்கி ஆவுடையாரின் மேலேயே மூன்றுமுறை வலம் வந்தது.

அப்போது தேவதேவேசனார் உமாதேவியோடு காட்சி கொடுத்து, நண்டைத் திருக்கண்ணால் பார்த்தார். உடனே நண்டு இயக்கனாக மாறியது. சிவபெருமான், இயக்கனை நோக்கி, “இயக்கனே! நீ சிவபூசை செய்த துருவாசரைப் பரிகாசம் பண்ணியதால் நண்டாகப் பிறந்தாய். இப்போது ஒரு மண்டலம் எம்மைப் பூசித்த

தால் சாபம் நீங்கி இயக்கன் ஆனாய். நீ உனது உலகத்துச் செல்'' என்று விடை கொடுத்தார். இயக்கன் தனது உலகம் அடைந்தான்.

இவ்வளவையும் இந்திரன் நேரில் கண்டு வியந்தான். உடனே சிவனிடம் இழந்த பலத்தை அளிக்கும்படி கேட்டான். சிவபெருமான் இந்திரனை நோக்கி, ''இந்திரனே நீ நாளை முதல் ஒரு மண்டல காலம் ஆயிரம் தாமரைப் பூவைக் கொண்டு சகஸ்ர நாம அர்ச்சனை செய். பலம் வரும்'' என்று கூறி மறைந்தார். இந்திரனும் அவ்வாறே ஒரு மண்டலம் அருச்சனை செய்து இழந்த பலத்தைப் பெற்று இந்திர லோகத்தை அடைந்தான்.

நண்டு பூசித்தது பற்றிச் செவிவழிச் செய்தியாக மேலும் இரண்டு வரலாறுகள் கூறப்படுகின்றன.

## செவிவழி வரலாற்றில் முதலாவது வரலாறு

முன்பு ஒரு காலத்தே கைலாசத்தில் பார்வதி தேவியார், சிவபெருமானைக் காணாமல் வருந்திச் சிவபெருமானைத் தேடிக்கொண்டு பூலோகத்துக்கு வந்தார். பூலோகத்தில் மூலிகைவனம் என்ற இடத்தில் (திருந்துதேவன்குடியில்) சிவபெருமான் சுயம்பு இலிங்கமாக எழுந்தருளியிருப்பதைக் கண்டார். சிவனது காட்சியைப் பெற விரும்பினார். பொன்னிறமான நண்டாக உருவம் கொண்டு அகழியில் பூத்த தாமரை மலரை கொடுக்கால் நறுக்கிக் கொடுக்காலேயே அந்தப் பூவைக் கவ்விக்கொண்டு நண்டு வளை வழியாக வந்து சுயம்பு மூர்த்தியின் முடியில் சூட்டி



திருப்பணி நடைபெறும் திருக்கோயில் தோற்றம்



தன்வந்திரி அகஸ்தியரிடம் ஆசி பெறுதல்

வழிபட்டு வந்தார். ஒருநாள் சிவன் வெளிப்பட்டுப் பார்வதிக்குக் காட்சி கொடுத்தார்.

## செவிவழி வரலாற்றில் இரண்டாவது வரலாறு

ஒரு முனிவர் பிறவியிலேயே கைகளும் கால்களும் வளைந்த தோற்றமுடையவராக இருந்தார். அவர் நடக்கும் போது நண்டு நடப்பது போல நடப்பார். அதனால் அவரை மக்கள் கற்கட முனிவர் (நண்டுக்கால் முனிவர்) என்று அழைத்தார்கள். மக்கள் இவ்வாறு அழைப்பதைக் கண்டு அந்த முனிவர் மனம் வருந்தினார். அதனால் அவர் மூலிகை வனத்துக்கு வந்து சுயம்புலிங்கத்தை வழிபட்டு வந்தார். ஒருநாள் சிவபெருமான் வெளிப்பட்டு அந்த முனிவரின் அங்கஈனத்தை மாற்றி இயல்பான கை கால்களை அருளினார்.

## 2) தன்வந்திரி வழிபட்டது

தன்வந்திரி என்பவர் தேவர்களின் மருத்துவர் ஆவார். அவர் மூலிகைகள் மூலம் மருத்துவம் செய்யும் ஆயுர்வேதம் மருத்துவத்தைக் கண்டுபிடித்து அதற்கான மருத்துவ சாத்திர நூலை இயற்றியவர். அவர் தேவலோகத்திலும் கிடைக்காத பச்சிலைகளைக் கண்டு பிடிக்கப் பூலோகத்துக்கு வந்தார். பல இடங்களில் பச்சிலைகளைத் தேடினார். ஒருநாள் அவர் அகத்தியரைச் சந்தித்தார். அபூர்வமான பச்சிலைகள் பூலோகத்தில் எங்கே இருக்கின்றன என்று அகத்தியரிடம் கேட்டார். அகத்தியர் தன்வந்திரியிடம், ''தேவ மருத்துவரே! காவிரி நதியின் வடகரையில் மூலிகை வனம் என்ற இடம்

உள்ளது. அங்கே மிக அபூர்வமான பச்சிலைகள் உள்ளன'' என்றார். பிறகு தன்வந்திரி காவிரி நதியின் வடகரையில் தேடிக்கொண்டு வரும்போது மூலிகை வனத்தை அடைந்தார்.

தன்வந்திரி மூலிகை வனத்துள் சுற்றி வந்தார். பிற இடங்களில் கிடைக்காத அபூர்வமான மூலிகைகள் சில அங்கே இருப்பதைக் கண்டார். அந்த வனத்தின் நடுவில் சுயம்பு இலிங்கம் இருப்பதைக் கண்டார். முறைப்படி சிவலிங்கத்தை வழிபட்டார். இப்படி சில நாட்கள் அவ்வனத்தில் தங்கி மூலிகைகளை ஆராய்ந்தார்.

ஒருநாள் தேவதேவேசன் மருத்துவர் கோலம் பூண்டு தன்வந்திரிக்கு முன் வந்தார். தன்வந்திரி அந்த மருத்துவரின் கோலத்தில் மயங்கி வணக்கம் கூறித் 'தாங்கள் யார்' என்று விசாரித்தார். வந்தவர் தான் ஒரு மருத்துவர் என்றும், தன்னை மகா வைத்தியநாதன் என்று மக்கள் அழைப்பார்கள் என்றும், இங்குள்ள பச்சிலைகள் அனைத்தையும் தானே பயிர் செய்து வருபவர் என்றும் கூறித் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். ''தாங்கள் இந்த மூலிகை வனத்துக்கு வந்திருப்பதைப் பார்த்தால் ஏதோ பச்சிலையைத் தேடுவதாகத் தெரிகிறது. என்னுடன் வாருங்கள்'' என்று சொல்லி அவ்வனத்திருந்த சிறியாநங்கை, பெரியாநங்கை முதலான அபூர்வ பச்சிலைகளை அடையாளம் காட்டி, அப்பச்சிலைகளின் குணத்தையும் அவற்றை மருந்தாகச் செய்யும் முறைகளையும் மருந்தருந்தும் முறைகளையும் தெரிவித்தார். இந்த மூலிகைகளை யார் வேண்டுமானாலும் எடுத்துப்

போகலாம். எந்தக் கட்டுப்பாடும் இல்லை. பரோபகார மாகவே இந்த வனத்தை உண்டாக்கி இருக்கிறேன்'' என்று சொல்லித் திடீர் என்று மறைந்தார்.

இப்படித் திடீர் என்று மறைந்ததால், ''வந்தவர் சிவபெருமானே'' என்று தன்வந்திரி தெரிந்து கொண்டார். உடனே சுயம்புலிங்கத்திடம் சென்று ''பெருமானே! அடியேன் பொருட்டு எளிவந்து காட்சி கொடுத்த கருணைக் கடலே! இந்த மூலிகை வனம் மட்டுமோ நீர் பயிரிட்டது. உலகத்தில் உள்ள அனைத்து மூலிகைகளும் உம்முடைய படைப்பல்லவா!'' என்று பலவாறு புகழ்ந்து போற்றி வணங்கினார். சில நாட்கள் அங்கே தங்கி வழிபட்டார். இறைவனிடம் உத்தரவு பெற்று அங்கிருந்த அபூர்வ மூலிகைச் செடிகளை எடுத்துக்கொண்டு தேவலோகம் சென்றார்.

### 3) சோழ மகாராஜன் வழிபட்டது

மிகப் பழங்காலத்தில் உறையூரில் வாழ்ந்த சோழ மகாராசன் ஒருவன் பக்கவாத நோயால் வருந்தினான். கை கால்களை அசைக்க முடியாமல் படுக்கையில் கிடந்தான். அரண்மனை மருத்துவர்கள் எவ்வளவோ முயன்று மருத்துவம் செய்தும் நோய் குணமாகவில்லை. சோழ மகாராசன் மிகவும் கவலையோடு படுக்கையில் கிடந்தபடியே சிவபெருமானைத் தியானம் பண்ணித் தனது நோயைத் தீர்த்து வைக்கும்படி பிரார்த்தனை செய்தான். ஒருநாள் தேவதேவேசனார் மருத்துவராகவும் பார்வதி தேவதி மருத்துவரின் மனைவியாகவும் கோலம் கொண்டு சோழனது அரண்மனைக்கு வந்தார்கள்.

அவர்கள் சோழ மகாராசனைக் கண்டு ஆறுதல் கூறினார்கள். மருத்துவர் தமது விபூதிப் பையை அவிழ்த்து விபூதியை எடுத்து சோழனது நெற்றியில் பூசினார். சிறிதளவு விபூதியைத் தண்ணீரில் போட்டுக் குடிக்கச் செய்தார். பிறகு ஒரு உருத்திராக்கத்தைப் பட்டுக் கயிற்றில் கோத்துக் கழுத்தில் கட்டி விட்டார். ''மகாராசனே! விபூதியும் உருத்திராக்கமும் சிவனது வேடங்கள். இவைகள் நோய்க்கு மருந்தாகும்; மந்திரங் களும் இவைகளே. நான் நாளைக்கு வருகிறேன். முறைப்படி மருத்துவம் தொடங்குகிறேன்'' என்று சொல்லிவிட்டுத் தானும் தன் மனைவியும் அரண் மனையை விட்டு வெளிபோய்விட்டனர்.

அன்றிரவு மகாராசன் நிம்மதியாகத் தூங்கினான். மறுநாள் பொழுது விடிந்ததும் மகாராசன் கண் விழித்துத் தானாகவே எழுந்து படுக்கையில் உட்கார்ந்தான். பக்கவாத நோய் இரவே குணமாகிவிட்டதால் மகாராசன் தானே நடக்கத் தொடங்கினான். கைகளால் எதையும் தூக்கவும் வைக்கவும் அவனால் முடிந்தது. இதைக் கண்ட அரண்மனைவாசிகள் அனைவரும் ஆச்சரியப் பட்டார்கள்.

நேற்று வந்து போன மருத்துவரும் அவரது மனைவியும் மறுநாளும் வந்தார்கள். அரசனைக் கண்டு மருத்துவர் ''மருத்துவம் தொடங்கலாமா'' என்று சிரித்த படி கேட்டார். அரசன் பரவசம் அடைந்து மருத்துவரை வணங்கி வரவேற்றான். ''மருத்துவரே! நீங்கள் பூசி விட்ட திருநீறும் கட்டிவிட்ட உருத்திராக்கமுமே

நோயைத் தீர்த்துவிட்டன. இவைகளே மருந்தாகி விட்டன. இதற்கு மேல் மருந்தும் வேண்டுமோ'' என்று மருத்துவரைப் பாராட்டினான். ''மருத்துவரே! உங்களுக்குச் சன்மானம் அளிக்க விரும்புகிறேன். தாங்கள் எதைக் கேட்டாலும் தரச் சித்தமாக இருக்கிறேன்'' என்றான்.

மருத்துவர் சோழ மகாராசனைப் பார்த்து, ''மகாராசனே! காவிரியின் வடகரையில் எங்கள் ஊர் இருக்கிறது. பெரிய வெள்ளம் வந்து எங்கள் ஊரில் இருந்த சிவாலயம் மண் மேடிட்டு மூடிக் கிடக்கிறது. அந்த மண்மேட்டை அகற்றிச் சிவாலயத் திருப்பணி செய்ய வேண்டும். அதுதான் நீ தரவேண்டிய சன்மானம்'' என்றார். மகாராசனும் இசைந்தான்.

மருத்துவர் வழிகாட்ட மகாராசன் பரிவாரங்களோடு வந்து மண்மேடிட்ட இடத்தை அடைந்தான். மருத்துவர் மண்மேட்டைச் சுட்டிக் காட்டினார். ''மண் மேட்டை அகற்றி மறைந்த கோயிலை வெளிப்படுத்தித் திருப்பணி செய்யவேண்டும்'' என்று மருத்துவர் கூறிவிட்டு மறைந்தார்.

மருத்துவர் மறைந்தவுடன் சோழ மகாராசன் திகைப்படைந்தான். மருத்துவராக வந்து நோய் தீர்த்தவர் இத்தலத்து இறைவனே என்று அறிந்து கொண்டான். மகாராசன் ஆயிரக்கணக்கான ஆட்களை விட்டு மண் மேட்டை அகற்றினான். வெள்ளத்தால் இடிந்த கோயிலில் இருந்த சிவலிங்கத்தைக் கண்டான். அம்மன் சிலை மட்டும் கிடைக்கவில்லை. ஆயினும் திருக்

கோயிலைப் புதுப்பித்தான். அம்மன் சிலை ஒன்று புதிதாகச் செய்து பிரதிட்டை பண்ணி அருமருந்தம்மை என்று பெயர் சூட்டினான். குடமுழுக்கும் செய்வித்து உறையூர்க்குத் திரும்பினான்.

சில ஆண்டுகளுக்கு பிறகு ஒரு வேளாளர் புதிதாக ஒரு திடல் (மேட்டு நிலம்) வாங்கி உழுதார். உழுத போது மண்ணில் புதைந்திருந்த அம்மன் சிலை கிடைத்தது. உடனே அந்த வேளாளர் இத்தகவலை மகாராசனிடம் தெரிவித்தார். சோழ மகாராசன் அங்கே வந்து, புதிதாக அம்மன் கோயில் கட்டி அபூர்வ நாயகி என்று பெயர் சூட்டிப் பிரதிட்டை செய்தான்.

## 4) திருஞானசம்பந்தர் இத்தலத்தில் வழிபட்டது

திருஞானசம்பந்தர் தமிழ்நாட்டில் உள்ள சிவாலயங்களை வழிபடுவதற்காகச் சீர்காழியிலிருந்து புறப்பட்டுக் காவிரியின் வடகரை வழியாக மேற்கு நோக்கிப் பயணம் செய்தார். வழியிடையில் பல தலங்களை வழிபட்டுத் திருவியலூர் என்ற தலத்தை வழிபட்டு அன்றிரவு அவ்வூரில் தங்கினார். இறைவன் திருநீறு பூசி உருத்திராக்கம் அணிந்து அழகிய திருவேடத்துடன் ஞானசம்பந்தரின் கனவில் தோன்றி அருள்வேடம் காட்டினார்; திருந்துதேவன்குடிக்கு வருக என்று கூறி மறைந்தார்.

மறுநாள் காலை ஞானசம்பந்தர் திருந்துதேவன் குடிக்கு வந்தார். தேவதேவேசனார் முன்பு கசிந்து உருகி வணங்கினார். அப்போது அருகில் இருந்த அடியார்

ஒருவர் ''இத்தலத்து இறைவன் சோழ மகாராசனுக்கு திருநீறு பூசி உருத்திராக்கம் அணிவித்துப் பக்கவாத நோயைத் தீர்த்தார்'' என்ற வரலாற்றை ஞானசம்பந்தரின் முன் விண்ணப்பித்துக் கொண்டார். ஞானசம்பந்தர், தாம் கனவில் கண்ட திருவேடமும் அடியார் விண்ணப் பித்த வரலாற்றில் இருந்த திருவேடப் பெருமையும் ஒத்திருத்தலை உணர்ந்தார். எனவே திருவேடச் சிறப்பை உலகம் அறிந்து உய்யவேண்டும் என்ற கருணை நோக்கமுடன் ''மருந்து வேண்டில் இவை மந்திரங்கள் இவை'' என்ற திருப்பதிகம் அருளினார். பிறகு இறைவனிடம் விடைபெற்று, மற்ற தலங்களை வழிபடப் புறப்பட்டார்.

இந்த வரலாற்றைக் குறிப்பாக எடுத்துரைக்கும் பெரிய புராணப் பாடல்கள்:

*வெங்கண் விடைமேல் வருவார்*

*வியலூர் அடிகளைப் போற்றித்*

*தங்கிய இன்னிசை கூடும்*

*தமிழ்ப்பதி கத்தொடை சாத்தி*

*அங்கண் அமர்வார் தம்முன்னே*

*அருள்வேடங் காட்டத் தொழுது*

*செங்கண் மாலுக் கரியார்தம்*

*திருந்துதே வன்குடி சேர்ந்தார்.*

திருந்துதே வன்குடி மன்னும்
சிவபெரு மான்கோயில் எய்திப்
பொருந்திய காதலில் புக்குப்
போற்றி வணங்கிப் புரிவார்
மருந்தொடு மந்திர மாகி
மற்றும்இலர் வேடமாம் என்று
அருந்தமிழ் மாலை புனைந்தார்
அளவில் ஞானத்தமுது உண்டார்.

—பெரியபுராணம்
திருஞானசம்பந்தர் புராணம் 294,295.



சுவாமி விமானம்



அம்பாள் விமானங்கள்

# திருந்துதேவன்குடித் திருப்பதிகம்

## திருஞானசம்பந்தர் தேவாரம்

பண் – கொல்லி) (மூன்றாம் திருமுறை

*திருச்சிற்றம்பலம்*

*மருந்துவேண் டில்இவை மந்திரங் கள்இவை*
*புரிந்துகேட் கப்படும் புண்ணியங் கள்இவை*
*திருந்துதே வன்குடி தேவர்தே எய்திய*
*அருந்தவத் தோர்தொழும் அடிகள்வே டங்களே.* 1

பொழிப்புரை:– (பிறவி நோய் தீர) மருந்து வேண்டும் என்றால், திருந்துதேவன்குடி என்னும் தலத்தில் தேவதேவேசனார் என்னும் நாமத்துடன் எழுந்தருளியவரும், அரும்பெரும் முனிவர்களால் தொழப்படும் சுவாமியும் ஆன சிவனது திருநீறும் உருத்திராக்கமும் ஆன திருவேடங்களான இவையே மருந்தாகும். (இறைவனைத் தியானிக்க) மந்திரம் வேண்டும் என்றால் திருவேடங்களாகிய இவையே மந்திரங்களாக அமையும். (ஆகமம் முதலிய நூல்களில்) விரும்பிக் கேட்கப்படும் புண்ணியங்கள் வேண்டும் என்றால் திருவேடங்களாகிய இவையே புண்ணியங் களாக அமையும். (அடிகள் – சுவாமி, உடையான். வேடங்கள் – திருநீறும் உருத்திராக்கமும் ஆன சின்னங்கள்)

*வீதிபோக் காவன வினையைவீட் டுவ்வன*
*ஓதிஓர்க் கப்படாப் பொருளைஓர் விப்பன*
*தீதில்தே வன்குடித் தேவர்தே எய்திய*
*ஆதிஅந் தம்இலா அடிகள்வே டங்களே.* 2

பொழிப்புரை:- தீங்கு இல்லாத திருந்துதேவன் குடி என்னும் தலத்தில் தேவதேவேசனார் என்னும் திருநாமத்துடன் எழுந்தருளியவரும், பிறப்பு இறப்பு இல்லாத சுவாமியும் ஆன சிவனது திருவேடங்கள், (பிரமன் நமது தலையில் எழுதிய) விதியை நீக்கக் கூடியன. (பழைய சஞ்சித) வினையை அழிக்கக் கூடியன. (ஆகம நூல்களை) ஓதியும் உணர்ந்து கொள்ள முடியாத பரம்பொருளை தியானத்துள்ளே உணர்விக்க வல்லன. (விதி என்பது நீட்டல் விகாரமாய் வீதி என்றாயிற்று. விதி என்றது பிராரத்த வினை. வினை என்றது பிராரத்தத்துக்கு மூலமான சஞ்சித வினை)

*மானமாக் குவ்வன மாசுநீக் குவ்வன*
*வானைஉள் கச்செலும் வழிகள்காட் டுவ்வன*
*தேனும்வண் டும்இசை பாடும்தே வன்குடி*
*ஆனஞ்சா டும்முடி அடிகள்வே டங்களே.* 3

பொழிப்புரை:- தேனீக்களும் கருவண்டுகளும் இசை ஒலி செய்கிற திருந்துதேவன்குடியில் பஞ்ச கவ்வியத்தைத் திருமஞ்சனமாகக் கொள்கிற திருமுடியை உடைய சுவாமியான சிவனது திருவேடங்கள், (அவற்றை அணிபவர்க்குப்) பெருமையை உண்டாக்கக்

கூடியன. மனமாசுகளை அழிக்கக் கூடியன. மேலான பேரின்பத்தை அனுபவிக்கச் செய்வதற்கு உரிய சரியையாதி நான்கு வழிகளைக் காண்பிக்கக் கூடியன. (மானம் – பெருமை; வான் – மேலான பேரின்பம்.)

*செவிகள்ஆர் விப்பன சிந்தையுள் சேர்வன*
*கவிகள்பா டுவ்வன கண்குளிர் விப்பன*
*புவிகள்பொங் கப்புனல் பாயும்தே வன்குடி*
*அவிகள்உய்க் கப்படும் அடிகள்வே டங்களே.* 4

பொழிப்புரை:– நிலங்களில் விளைச்சல் மிகும் படி (காவிரியாற்றின்) நீர் பாய்கிற திருந்துதேவன் குடியில் (வேள்வி செய்து) அவிசு கொடுக்கப்படுகிற சுவாமியான சிவனது திருவேடங்கள் (புகழ்மொழி களால்) காதுகளை நிறைவிப்பன. மனத்திலே (தியானப் பொருளாய்ப் பொருந்துவன. (வேதம் முதலான நூல்களில்) பாடல்களால் பாடப்படுவன. (காண்பவர் களின்) கண்களை மகிழ்ச்சியால் குளிரச் செய்வன.

*விண்ணுலா வும்நெறி வீடுகாட் டும்நெறி*
*மண்ணுலா வும்நெறி மயக்கம்தீர்க் கும்நெறி*
*தெண்ணிலா வெண்மதி தீண்டுதே வன்குடி*
*அண்ணல்ஆ னேறுடை அடிகள்வே டங்களே.* 5

பொழிப்புரை:– தெளிவான நிலவை வீசும் வெண்மையான சந்திரன் (சோலைகளைத்) தொடுகிற திருந்துதேவன்குடியில் தலைமையான இடபத்தை

உடைய சுவாமியான சிவனது திருவேடங்கள், பூவுலகில் வழங்கும் அறநெறி ஆகும். தேவர் உலகில் உலாவ வைக்கிற புண்ணிய நெறியாகும். (உலக மாயையான) மயக்கத்தை நீக்குகிற குரு உபதேச நெறியாகும். (சாயுச்சியமான) வீடுபேற்றை அறிவிக்கிற ஞான நெறியாகும்.

*பங்கம்என் னப்படர் பழிகள்என் னப்படா*
*புங்கம்என் னப்படர் புகழ்கள்என் னப்படும்*
*திங்கள்தோ யும்பொழில் தீண்டுதே வன்குடி*
*அங்கம்ஆ றும்சொன்ன அடிகள்வே டங்களே.* 6

பொழிப்புரை:- சந்திரன் தொடுகிற சோலைகளால் நெருங்கிய திருந்துதேவன்குடியில் (வேதங்களுக்குரிய) ஆறு அங்கங்களையும் அருளிய சுவாமியான சிவனது திருவேடங்கள் குறையுள்ளன என்றும், தொடர்கிற பழிகள் என்றும் கூறப்படமாட்டா. உயர்ந்தன என்றும் தொடர்கிற புகழ்கள் என்றும் கூறப்படும். (பங்கம் – குறை. புங்கம் – உயர்வு.)

*கரைதல்ஒன் றும்இலை கருதவல் லார்தமக்கு*
*உரையில்ஊ னம்இலை உலகினில் மன்னுவர்*
*திரைகள்பொங் கப்புனல் பாயும்தே வன்குடி*
*அரையில்வெண் கோவணத்து அடிகள்வே டங்களே.* 7

பொழிப்புரை:- அலைகள் மிகும்படி (காவிரியாற்றின்) நீர் பாய்கிற திருந்துதேவன்குடியில் இடுப்பில்

வெண்மையான கோவணத்தை உடைய சுவாமியான சிவனது திருவேடங்களில் ஏசிப் பேசுதற்கு யாதொரு குறையும் இல்லை. அந்த வேடங்களை நினைத்துத் தியானிக்க வல்லவர்க்கு உண்டாகும் புகழில் யாதொரு குறைபாடும் இல்லை. மேலும் அவர்கள் நில உலகில் நீண்ட காலம் நிலைத்திருப்பார்கள். (கரைதல் – ஏசிப் பேசுதல். உரை – புகழ். ஊனம் – குறைபாடு.)

*உலகம்உட் கும்திறம் உடைஅரக் கன்வலி*
*விலகுபூ தக்கணம் வெருட்டும் வேடத்தின*
*திலகமா ரும்பொழில் சூழ்ந்ததே வன்குடி*
*அலர்தயங் கும்முடி அடிகள்வே டங்களே.* 8

பொழிப்புரை:- மஞ்சாடி மரங்கள் நிறைந்த சோலை சூழ்ந்த திருந்துதேவன்குடியில் (நண்டு பூசித்த) தாமரை மலர் விளங்குகிற திருமுடியை உடைய சுவாமியான சிவனது திருவேடங்கள், உலகம் முழுதும் அஞ்சும்படியான ஆற்றலுடைய இராவணனை ஒத்த வலிமை உடையனவாய் (வழிப்போக்கில்) குறுக் கிடுகிற பூத பிரேத பைசாசங்களின் கணங்களை வெருட்டித் துரத்தும் பொலிவுடையன. (திலகம் – மஞ்சாடி மரம்)

*துளக்கம்இல் லாதன தூயதோற் றத்தன*
*விளக்கம்ஆக் குவ்வன வெறிவண்டா ரும்பொழில்*
*திளைக்கும்தே வன்குடி திசைமுக னோடுமால்*
*அளக்கஒண் ணாவண்ணத்து அடிகள்வே டங்களே.* 9

பொழிப்புரை:- வண்டுகள் மணத்தை நுகரும் சோலைகள் மிகுந்த திருந்துதேவன்குடியில் உள்ளவரும் பிரம்மாவோடு திருமாலால் அளக்க முடியாத இயல் புடையவரும் ஆகிய சுவாமியான சிவனது திரு வேடங்கள், எதனாலும் அசைக்க முடியாதவையாகும். அறிவு விளக்கத்தை உண்டாக்குவன ஆகும். (துளக்கம் – நடுக்கம்; வெறி – மணம்.)

*செருமரு தண்துவர்த் தேர்அமண் ஆதர்கள்*
*உருமரு வப்படாத் தொழும்பர்தம் உரைகொளேல்*
*திருமரு வும்பொய்கை சூழ்ந்ததே வன்குடி*
*அருமருந் தாவன அடிகள்வே டங்களே.* 10

பொழிப்புரை:- வாதப் போரைப் பொருந்திய குளிர்ந்த காவி உடை உடுத்த பௌத்தரும் சமணரும் ஆராயும் அறிவில்லாதவர்கள். அவர்களின் உருவத் தோடு நெங்கிப் பழகக் கூடாத இழிந்தவரான அவரது பேச்சை ஏற்க வேண்டா. அழகு கூடிய அகழியான பொய்கையால் சூழப்பட்ட திருந்துதேவன்குடி சுவாமி யான் சிவனது திருவேடங்கள் அமிர்தத்துக்கு ஒப்பானவை. (தேர் – தேரர், பௌத்தர்)

*சேடர்தே வன்குடித் தேவர்தே வன்தனை*
*மாடம்ஓங் கும்பொழில் மல்குதண் காழியான்*
*நாடவல் லதமிழ் ஞானசம் பந்தன*
*பாடல்பத் தும்வல்லார்க்கு இல்லையாம் பாவமே.*
11

பொழிப்புரை:- உயர்ந்தோர் வாழும் திருந்து தேவன்குடித் தேவதேவேசனாரை மாடங்களும் உயர்ந்த சோலைகளும் மிகுந்த சீர்காழிப் பதியானான திருஞான சம்பந்தர் பாடிய விரும்பத்தக்க தமிழ்ப் பாடல் பத்தையும் பாடவல்லவருக்குப் பாவம் இல்லை.

திருச்சிற்றம்பலம்



## அண்மையில் உள்ள பாடல் பெற்ற தலம் திருவியலூர்

திருந்துதேவன்குடிக்குத் தெற்கே அண்மையில் திருவியலூர் என்னும் பாடல் பெற்ற தலம் இருக்கிறது. இது வழக்கில் திருவிசலூர் என்று வழங்குகிறது. இந்தத் தலம் கும்பகோணத்திலிருந்து காவிரியாற்றின் வடகரை வழியாக (பூம்புகார் – கல்லணைச் சாலையில்) மயிலாடுதுறை செல்லும் பேருந்து வழியில், கும்ப கோணத்துக்குக் கிழக்கே 7 கி.மீ. தொலைவில் உள்ளது. கும்பகோணத்திலிருந்து செல்லும் 2, 26, 38 ஆம் நம்பர் நகரப் பேருந்துகளில் ஏறி, திருவிசலூர் பள்ளிக்கூடம் ஸ்டாப்பில் இறங்கி, அங்கிருந்து வடக்கே செல்லும் கற் சாலையில் இரண்டு பர்லாங்கு தொலைவு சென்றால் இத்தலத்தை அடையலாம்.

இந்தத் திருவியலூர்த் திருக்கோயில் தஞ்சாவூர் அரண்மனையின் பரிபாலனத்தின் கீழ்ப் பராமரிக்கப் படுகிறது. இத்திருக்கோயில் நாட்டுக்கோட்டை நகரத் தாரின் திருப்பணியால் புதுப்பிக்கப் பெற்றுப் பொலிவுடன் திகழ்கிறது.

இத்திருக்கோயில் இரண்டு கோபுரங்களையும் இரண்டு பிரகாரங்களையும் உடையதாகக் கிழக்கு முகமாக அமைந்திருக்கிறது. முதல் கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் பலிபீடமும் கொடிமரமும் நந்தியும் இருப்பதைக் காணலாம். இங்குள்ள கணபதி மூலாதாரக் கணபதி என்ற பெயருடையவர். இங்குள்ள

பிரகாரத்தின் தெற்கு மேற்கு வடக்கு ஆகிய மூன்று புறத்திலும் மதிலை ஒட்டினாற்போல் நந்தவனம் அமைந்துள்ளது.

இரண்டாம் கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் கருவறை அர்த்த மண்டபம் மகாமண்டபம் பரிவார ஆலயங்கள் ஆகியவற்றைக் காணலாம். கருவறையில் உள்ள சிவலிங்க மூர்த்தி யோகானந் தீசுவரர் என்னும் திருநாமத்தை உடையவர். இவருக்குப் புராதனேசுவரர் என்றும் வில்வாரண்யேசுவரர் என்றும் வேறு பெயர்கள் உள்ளன. அர்த்த மண்டபத்தில் பஞ்ச மூர்த்திகள் எழுந்தருளி உள்ளனர். அர்த்த மண்டபத் துக்குக் கிழக்கே மகாமண்டபும் உள்ளது. இவற்றைச் சுற்றி உள் பிரகாரம் அமைந்துள்ளது.

தெற்குப் பிரகாரத்தில் மதிலை ஒட்டினாற்போலச் சமயாச்சாரியார் நால்வர், சேக்கிழார் திருமேனிகள் உள்ளன. மற்றும் சப்த கன்னியர்களும் உள்ளனர். மேற்குப் பிரகாரத்தில் விநாயகர் சுப்பிரமணியர் மகா லட்சுமி சன்னதிகள் உள்ளன. வடக்குப் பிரகாரத்தில் சண்டேசர் சன்னதி உள்ளது. வடகிழக்கே நவக்கிரகங் களும் பைரவர் சன்னதியும் உள்ளன.

கருவறையின் தெற்குப் புறக் கோட்டங்களில் விநாயகரும் தட்சிணாமூர்த்தியும் உள்ளனர். மேற்குப் புறக் கோட்டத்தில் திருமால் இருக்கிறார். வடக்குப் புறக் கோட்டத்தில் பிரம்மாவும் துர்க்கையும் உள்ளனர்.

முதல் கோபுரத்துக்கும் இரண்டாம் கோபுரத்துக்கும் இடையே உள்ள பரந்த வெளியில் கொடிமரத்துக்கு அண்மையில் தெற்கு முகமாக அம்பாள் சன்னதி உள்ளது. அம்பாள் சன்னதி கருவறையில் உள்ள அம்பிகை, சாந்த நாயகி என்ற திருநாமம் உள்ளவள். இந்த அம்பிகைக்குச் சவுந்தரியநாயகி என்ற வேறு பெயரும் உண்டு. அம்பாள் சன்னதியின் மகா மண்டபத்தின் சுவர்களில் அஷ்டலட்சுமிகளின் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

இத்தலத்தின் தீர்த்தம் கோயிலுக்கு வெளியே வடகிழக்கில் உள்ளது. இதற்குச் சடாயு தீர்த்தம் என்று பெயர் வழங்குகிறது.

## தலபுராணச் செய்திகள்

1. சேரநாட்டு மன்னனின் மகன் கணபதி என்பவன் காமக்கிழத்தியர் வசப்பட்டுத் தீய நெறியில் ஒழுகி அளவற்ற பாவங்களைச் செய்தான். அதனால் நோய் வாய்ப்பட்டு வருந்தித் தலயாத்திரை செய்யப் புறப்பட்டான். அங்ஙனம் தல யாத்திரை செய்யும் போது ஒருநாள் திருவியலூரை அடைந்து காவிரியில் நீராடினான். யோகானந்தீசுவரரை வழிபட்டு நோய் நீங்கினான்.

2. கோகுலம் என்ற நகரத்தின் அரசன் முன்பு ஒரு பெண்ணைக் கொலை செய்த பழிக்கு மனம் வருந்தி யாத்திரை செய்து வரும்போது திருவியலூரை அடைந்து சுவாமியை வழிபட்டுக் கொலைப்பழி நீங்கப் பெற்றான்.

3. திருவியலூரில் வாழ்ந்து வந்த சிவனடியார் அவ்வூர் சுவாமியை வழிபடும்போது அவரது உயிரைக் கவரும் பொருட்டு இயமன் கோபுர வாயிலில் நுழைந்தான். இதனை அறிந்த இடபதேவர் (நந்தி) இயமனைத் தண்டித்தார். இயமன் தனது குற்றத்தை உணர்ந்து இடபதேவரையும் யோகானந்தேசுவரரையும் வழிபட்டு மன்னிப்புப் பெற்றான்.

4. ஒரு சமயம் சிவபெருமான் கயிலாயத்திலிருந்து திருவியலூர்க்கு வந்து குருநாதர் வடிவில் தங்கியிருந்தார். திருவியலூரில் வாழ்ந்த வேளாளரான சிவபத்தர் ஒருவர்க்குச் சிவதீக்கை அளித்து ஞானோபதேசம் செய்தார். ஆளுடைய தேவ நாயனார் எனத் தீட்சா நாமம் வழங்கினார். பின்பு ஒருநாள் திருவுந்தியார் என்னும் சாத்திர நூலை இயற்றிச் சீடரிடம் கொடுத்து அதன் நுட்பங்களை விளக்கினார்.

5. திருவியலூரில் சீதர அய்யர் என்ற பக்தர் தமது பெற்றோர்களின் சிரார்த்த தினத்தன்று வீட்டு வாயிலில் பசியால் வாடிச் சோறு கேட்ட இழிகுலத்தானுக்குச் சோறு போட்டார். அதனால் அவ்வூரில் வாழ்ந்த ஏனைய அந்தணர்கள் "சிரார்த்த தினத்தில் இழிகுலத்தானுக்குச் சோறிட்டது குற்றம்" என்று அவரை விலக்கி வைத்தனர். சீதர அய்யர் தமது செயல் குற்றமல்ல என்பதை நிரூபிப்பதற்காகத் திருவியலூர்ப் பெருமான் திருவருளால் தெருவில் உள்ள கிணற்றில் இருந்து கங்கை பொங்கி வரச் செய்து காட்டினார்.

# திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் வரலாறு

எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமான், ஆன்மாக்கள் ஞானானுபவம் பெற்று உய்யும் பொருட்டு ஒருசமயம் மானுடச் சட்டை தாங்கிச் சிவயோகியார் கோலத்தில் பூலோகத்துக்கு வந்து உய்யவந்த தேவ நாயனார் என்னும் திருநாமத்தோடு தமிழகத்தில் உள்ள சிவத்தலங்கள் தோறும் சஞ்சரித்தார்.

ஒருநாள் அவர் திருவியலூர் என்னும் தலத்துக்கு வந்தார். அவ்வூரில் வாழ்ந்த வேளாளரான சிவபத்தர் ஒருவர் சிவயோகியாரைக் கண்டு அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி எழுந்தார்; கண்ணீர் வார்ந்து மெய் சிலிர்த்துப் பரவசராகினார். இதைக் கண்ட உய்யவந்த தேவநாயனார் சிவபக்தரின் மலபரிபாகத்தை அறிந்து அவரைத் தமது சீடராக ஏற்றுக்கொண்டு திருவடி தீக்கை அளித்து ஆளுடைய தேவநாயனார் என்ற தீட்சா நாமம் வழங்கி ஞானோபதேசம் செய்தார்.

உய்யவந்த தேவநாயனார் தமது சீடரான ஆளுடைய தேவ நாயனாரின் வாயிலாக உலகத்துக்குச் சிவஞானத்தைப் புகட்ட விரும்பித் திருவுந்தியார் என்னும் சாத்திர நூலை இயற்றினார். அந்த நூலைத் தமது சீடர்க்கு வழங்கி அந்த நூலின் கருத்துக்களையும் சீடர்க்கு விளக்கியருளினார். சிறிது காலம் திருவிய லூரில் தங்கியிருந்து தமது சீடரின் ஐயங்களையும் அகற்றிச் சிவஞானானுபவத்தை உணர வைத்தார்.

உய்யவந்த தேவ நாயனாராக வந்த சிவபரம் பொருள் தாம் கருதி வந்த காரியம் நிறைவு பெற்றதால், தமது சீடரை அழைத்து ''நீர் சிவத்தலங்கள் தோறும் சென்று திருவுந்தியாரின் தாத்பரியத்தைப் பரவச் செய்யும்'' என்று ஆணையிட்டு மறைந்தார்.

உய்யவந்த தேவ நாயனார் திருவியலூரில் தங்கி அங்கேயே மறைந்ததால் அவரைத் திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார் என்று பிற்காலத்தார் அழைக்கலாயினர். திருவுந்தியாரின் இறுதிப் பாடலான பல சுருதியில் தம் பெயரைக் குறிப்பிட்டுள்ளார்.

திருவுந்தியாரான சாத்திர நூல், மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் முதலாவது நூலாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது. திருவியலூர் உய்யவந்த தேவ நாயனாரின் சீடருக்குச் சீடரான திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார் திருக்களிற்றுப்படியார் என்னும் சாத்திர நூல் இயற்றினார். இந்நூல் மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் இரண்டாவது நூலாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது. இந்த திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் என்னும் இரண்டு நூல்களுக்கும் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த சிவப்பிரகாசத் தம்பிரான் என்னும் முனிபுங்கவர் விரிவுரை எழுதி உள்ளார்.

# திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் ஆலயம்

மெய்கண்ட தேவனார்க்குத் திருவெண்ணெய் நல்லூரிலும், அருணந்தி சிவாச்சாரியார்க்குத் திருத் துறையூரிலும், மறைஞான சம்பந்தர்க்குச் சிதம்பரத் திலும், உமாபதி சிவாச்சாரியார்க்குக் கொற்றவன் குடியிலும் ஆலயங்கள் இருப்பதைப் போல, திரு வியலூர் உய்யவந்த தேவ நாயனார்க்கும் ஓர் ஆலயம் திருவியலூரில் அமையவேண்டும் என்று **திருவாவடு துறை ஆதீனகர்த்தர் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்** திருவுள்ளம் கொண்டிருக் கிறார்கள்.

இந்த ஆலயம் அமையத் திருவியலூர் ஆலய திருப்பணிச் செட்டியார்களிடம் அடிமனை கோரப் பெற் றிருக்கிறது. ஆலயம் அமைய அடிமனை விரைவில் கிடைக்கும் என்றும் தெரிகிறது. அடிமனை கிடைத்ததும் ஆலயத்தை அமைத்து நாடோறும் ஒருகால பூசைக்கு வேண்டியதை உபகரிப்பதாகவும் திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் அவர்கள் திருவுளம் கொண்டிருக் கிறார்கள்.

உ

சிவமயம்

# திருந்துதேவன்குடி கற்கடேஸ்வரசுவாமி திருக்கோயில் திருப்பணி செய்த பெருந்தகையார்கள்

| | | |
|---|---|---|
| 1. | கருவறை, விமானம், அர்த்தமண்டபம், நந்தி மண்டபம். | – கோவை, திரு. இரா. வசந்தகுமார். |
| 2. | மகாமண்டபம் | – திருவாவடுதுறை ஆதீனம் சீர்வளர்சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள். |
| 3. | நடராசர் சந்நிதி, நடராசர் மண்டபம் | – தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குரு மகாசன்னிதானம் அவர்கள். |
| 4. | விநாயகர் சன்னதி | – திரு. சிதம்பரம்இராமலிங்கம், திருச்சி. |
| 5. | சுப்பிரமணியர் சன்னதி | – திரு. கே.சி.என். மாணிக்கவாசகம், கோமதி டிரேடிங், திருச்சி. |
| 6. | கஜலட்சுமி சன்னதி | – டாக்டர். திரு. இராதாகிருஷ்ணன், மடத்துத் தெரு, கும்பகோணம். |
| 7. | சண்டேசர் சன்னதி | – திரு. பி. சரவணன். பெரியகுளம், தேனி. |

| | | |
|---|---|---|
| 8. துர்க்கை | – | டாக்டர். பர்வதவர்த்தினி, சைதாப்பேட்டை. |
| 9. இரண்டாம் கோபுரம் (உள் கோபுரம்) | – | அமெரிக்கா திரு. சிவக்குமார் ராம்ஜி.<br>குமுதம் மயன். |
| 10. உள் சுற்று மதில் | – | திரு. சேகர் பிள்ளை, கோமல். |
| 11. திருக்கல்யாண மண்டபம் | – | 1. திரு. எம். முத்தையன், இஞ்சினியர், சென்னை.<br>2. திரு. ஆர். சுவாமிநாதபிள்ளை, கொண்டாங்குடி.<br>3. திரு. ஜி.பாலசுப்பிரமணியம், திருவிசலூர். |
| 12. வெளிச்சுற்று மதில் | – | 1. திரு. டி.எஸ். சாமிநாதன், கும்பகோணம்.<br>2. திரு. டி.எஸ். கோவிந்தராசன், அருள் & கோ.<br>3. திரு. கே. குஞ்சிதபாதம், ஆசிரியர், குடந்தை.<br>4. திரு. என். விசுவநாதன், குடந்தை.<br>5. திரு. அனந்த நாராயணன், திருச்சி. |
| 13. கும்பாபிஷேக தின அன்னதானம் | – | திரு.லெட்சுமி நாராயணன்,<br>நிருவாகி, ஸ்ரீதர அய்யாவாள் மடம். |
| | | மற்றும் பலர். |

விபரம் அளித்தவர்:–

**கொண்டாங்குடி திரு. ஆர். சுவாமிநாதபிள்ளை. கற்கடேஸ்வரர் நற்பணி மன்றத் தலைவர்.**

உ



# நண்டு பூஜித்த தலம்

குடந்தைக்கு அருகிலுள்ளது திருவிசலூர். இவ்வூரிலுள்ள சிவாலயத்தின் பின்புறம் ஒரு கி.மீ. தூரத்தில் இருக்கும் திருக்கோயில் திருந்துதேவன்குடி எனப்படும் பாடல் பெற்ற தலம். நண்டாங்கோயில் என்று சொல்வார்கள்.

இத்தலத்துக்கு மிகப்பல சிறப்புகள் உண்டு.

கடக ராசியைச் சேர்ந்தவர்கள் வழிபட வேண்டிய திருக்கோயில். அவர்கள் வழிபட்டால் எல்லா வகையான தோஷங்களும் நீங்கும்.

இத்தலத்தைப் பற்றி திருஞானசம்பந்தர் பாடும் போது இங்குள்ள சிவபெருமான் எல்லா வகையான வியாதிகளையும் தீர்க்கும் வல்லமை படைத்தவர் என்று பாடியிருக்கிறார். 'மருந்து வேண்டில் இவை மந்திரங்கள் இவை' என்பது ஞானசம்பந்தர் வாக்கு.

எல்லாக் கோயில்களிலும் சந்திரன் நின்ற நிலையில் இருப்பவர். இந்தக் கோயிலில் அமர்ந்த நிலையில் இருக்கிறார். அதுவும் யோக நிலையில் இருக்கிறார். எனவே எல்லா ராசிக்காரர்களும் இங்கு வந்து இறைவனையும், இறைவியையும், சந்திரனையும் வணங்கினால் சந்திரனால் விளையும் ஜாதக தோஷங்கள் நீங்கும். சந்திராஷ்டம தீடைகூட தகர்ந்து போகும்.

இது உமாதேவி நண்டு வடிவில் சிவபெருமானை வழிபட்ட தலம். உமை வழிபட்ட நேரத்திலேயே இந்திரனும் வழிபட்டு வந்தான். அருகிலுள்ள அகழியிலிருந்து தாமரை மலர்களைக் கொண்டு வந்து அர்ச்சிப்பது நண்டின் பழக்கம்.

பூக்கள் குறைவதை பார்த்த இந்திரன் ஒருநாள் நண்டு ஒன்றுதான் மலர் திருடி வந்து அர்ச்சிக்கிறது என்பதை அறிந்தான். நம் பூஜைக்கு இடையூறாக இருந்து, இந்த நண்டு சுவாமியின் மேல் ஏறி மலர் அணிவிப்பதா என்று கோபம் கொண்டான். உண்மை நிலை தெரியாமல் கற்கடகத்தை (நண்டை) வெட்ட முற்பட்டான் இந்திரன். முதல் வெட்டு சிவபெருமானின் தாடையில் விழுந்தது. இரண்டாவது வெட்டு நெற்றியில் விழுந்தது. இறைவன் தன் தலையில் துவாரம் கொடுத்து தேவியை தன்னுடன் ஐக்கியப்படுத்திக் கொண்டார் என்பது புராணம். உண்மை அறிந்த இந்திரன் திருந்தினான். எனவே அந்த ஊருக்கு திருந்துதேவன்குடி என்ற பெயர் வந்தது.

இறைவன் திருமேனியில் தழும்புகள் இருக்கின்றன. ஆடி மாதத்தில் அமாவாசையும் பூர நட்சத்திரமும் கூடும் நாளில் 21 குடம் காராம் பசுவின் பாலினைக் கொண்டு இரவில் சிவலிங்கத்தை அபிஷேகித்தால் நண்டு வெளியில் வந்து காட்சி கொடுக்கும் என்கிறது வசிஷ்ட மகாத்மியம் என்ற நூல்.

இக்கோயில் இந்திரனுக்கும் தன்வந்திரி மகரிஷிக்கும், வரகுண பாண்டியனுக்கும் அருள் கிடைத்த இடம்.

சோழர்கள் காலத்தில் ஆறுகால பூஜை நடந்த திருக் கோயில் இது. ராஜராஜன் காலத்தில் வீணையில் சாமகானம் மீட்ட கட்டளைகள் கொடுத்த ஆலயம் இது. இந்நாளில் ஒரே ஒரு காலம் மட்டும் பூஜை நடைபெறுகிறது. இத்திருக் கோயிலின் கும்பாபிஷேகம் ஜூலை மாதம் 6ம் தேதி ஞாயிறு அன்று நடைபெறவுள்ளது. திருந்துதேவனை வழிபட்டு பிணி நீக்கமும், ஜாதக தோஷ நிவர்த்திகளும் பெறுவோமாக.

*தினமலர் – பக்திமலர், 13 ஜூன் 2003, பக்.8*



பாவை விளக்கு

THIRUVAVADUTHURAI ADHEENAM SARASWATHI MAHAL LIBRARY & RESEARCH CENTRE

THIRUVAVADUTHURAI - 609 803.
TAMIL NADU - SOUTH INDIA.

ஸ்ரீநமசிவாயமூர்த்தி ஆஃப்செட் அச்சகம்,
திருவாவடுதுறை.